**செய்தி வெளியீடு எண்: 061** **நாள் : 28.01.2016**

**செய்தி வெளியீடு**

**பொது (தேர்தல்கள்—7)த் துறை**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016ஐ முன்னிட்டு அதன் முன்னேற்பாடாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள், கூடுதல் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி ஏற்கனவே கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இரு மண்டலங்களிலும் முறையே 12.01.2016 மற்றும் 19.01.2016 அன்று நடைபெற்றது.

சென்னை மண்டலத்தைச் சேர்ந்த சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள், கூடுதல் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி 28.01.2016 அன்று சென்னையில் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. அப்பயிற்சியின் போது, தேர்தல் நிர்வாகம் குறித்த பொருண்மை தேர்தல் நிர்வாகத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள புதிய மென்பொருள், மாற்று திறனாளி வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் குறிப்பாக காவல் துறையினருக்கு வழங்கப்படும் தபால் ஓட்டு வசதி போன்றவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் துறைத் தலைவர், வேலூர் மற்றும் விழுப்புரம், காவல் துறைத் தலைவர் (வடக்கு மண்டலம்), காவல் துறைத் தலைவர் (நிர்வாகம்) ஆகியோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் இணை தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கான அடுத்த பயிற்சி 05.02.2016 அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**